# கலாதீபம்

කලාදීපම්

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.02.2025 | தீபம் 32


## ஆசிரியர் பயிற்சி தகைமைச் சான்றிதழ் வழங்கல்

## வடக்கு மாகாண கௌரவ ஆளுநர்

## நாகலிங்கம் வேதநாயகன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் **2021/2022** கல்வியாண்டில் பயிற்சியை மேற்கொணடு இலங்கை பரீட்சை திணைக்களம் நடாத்திய இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கான பயிற்சி சான்றிதழ் வழங்கும் வைபவம் 11.01.2025 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் சிறப்புற இடம்பெற்றது.

கலாசாலையின் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் கௌரவ நாகலிங்கம் வேத நாயகன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

கலாசாலையில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் விசேட பூசை இடம்பெற்றது. இதனை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா.செல்வசேனக்குருக்கள் நடத்தி வைத்தார்

தொடர்ச்சி - 5ஆம் பக்கம்

01.01.2025 — 31.01.2025 காலப்பகுதிக்கான நிகழ்வுகளின் தொகுப்பு

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவாளர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

செல்வி தி.பெலினி
ஆசிரிய மாணவி விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.

**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com

## கலாசாலையில் புத்தாண்டு ஆரம்பநாள் செயற்பாடுகள்

### Clean Sri Lanka உறுதியுரையுடன் ஆரம்பம்

ஜனவரி முதலாம் திகதி ஆகிய இன்று 01.01.2025 கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் புது வருட செயற்பாடுகள் ஆரம்பமாகின.

கலாசாலையில் கல்வி நடவடிக்கைகளுக்கு விடுமுறை காலமாகிய போதிலும் விரிவுரையாளர்களும் கலாசாலைக்கு வருகை தந்து உறுதியுரை மேற்கொண்டனர்

தொடர்ந்து கலாசாலை அதிபர் புத்தாண்டு வாழ்த்து தெரிவித்து உரையாற்றினார்.

அதனை அடுத்து பணியாளருக்கான கூட்டங்கள் இடம்பெற்றன அத்துடன் சிற்றுண்டிகள் பரிமாற்றமும் இடம்பெற்றது.








கலாதீபம்
කලාදීපම
Kaladeepam

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு
කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.
The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College

## நமது நோக்கு

### ஆரம்ப பாடசாலை ஆசிரியருக்கான வகிபாகம்

ஒரு நாட்டின் வளமான எதிர்காலம் அந்நாட்டில் அளிக்கப்படும் கல்வியிலேயே தங்கியுள்ளது. எனவே இக்கல்வியை மாணவர்களுக்கு வழங்கு கின்ற ஆசிரியர்களுக்கான சில பண்புகளும் காணப்படுகின்றன.

கல்வியானது மனிதவள மேம்பாட்டிற்கும் மனித வாழ்கை முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக அமைகின்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. கல்வி யில் ஏற்படும் முன்னேற்றமானது ஒரு நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

ஆசிரியரானவர் கல்வியின் நோக்கங்கள் மற்றும் குறிகோள்களை தெளிவாக விளங்கியிருப்பதுடன் கலைத்திட்ட உள்ளடக்கத்தை தீர்மானிக்க பிள் ளையின் ஆர்வம், தேவை, விருப்பம் மற்றும் கற்றல் கற்பித்தலில் தான் கையாள வேண்டிய முறைகள் போன்ற செயற்பாடுகளை முன்னெடு க்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

மாணவர்களுக்கு அறிவு, திறன், மனப்பாங்கு, ஒழுக்க ரீதியான திறன்களை வழங்கவும், சமய பண்புகளைப் பின்பற்றச் செய்வதற்கும் ஆலோ சனை மற்றும் வழிகாட்டல்கள் வழங்கி அவர்க ளுக்கு உதவுகின்ற ஒரு ஆலோசகராகவும் ஆசி ரியர் தம்மை காலத்திற்குக் காலம் இற்றைப் படுத்திக் கொள்ள வேண்டும்.

பாடப் புத்தகங்களில் இருக்கும் பொருளாக அறிவைக் கருதாமல், கற்றல் கற்பித்தல் முறை யாலும் சுய அனுபவத்தாலும், விவாதித்தலாலும் கருத்தேற்றமடைந்து கட்டமைப்பு செய்து கொள் வது அறிவு எனப்புரிந்து கொள்ள வேண்டும்.

## விரிவுரையாளர் திருமதி க.அன்பரசிக்கு கௌரவம்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நீண்ட காலம் (24 வருடங்கள்) உடற்கல்வித்துறை விரிவுரையா ளராக பணியாற்றி விரைவில் சேவையில் இருந்து ஓய்வு பெற உள்ள திருமதி க..அன்பரசி அவர்-களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு 11.01.2025 சனிக்கிழமை கலாசாலையில் இடம்பெற்றது.

கலாசாலையில் பயிற்சியை முடித்த ஆசிரியர்-களுக்கு பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திரம் வழங்கும் நிகழ்வின் போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் கௌரவ நாகலிங்கம் வேதநாயகன் கலாசாலை சமூ கத்தின் வேண்டுகோளை ஏற்று திருமதி க.அன்பரசிக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார்.

கலாசாலையின் உப அதிபர் சத்தியா ரஞ்சிற் அன்பரசிக்கான பாராட்டுரையை ஆற்றினார். சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சு.சிவலோஜினி பொன் னாடை போர்த்தி கௌரவித்தார்.





# News in Brief - Month of January

**01.01.2025**
## New Year Celebration

The Kopay Teachers College ceremonially commenced duties for the New Year on 1st January 2025 with a vibrant event at the college premises.

The ceremony was graced by the presence of the Principal, along with the Deputy Principal, Lecturers and Non academic Officers of the College .

The event began with the hoisting of the National and College flags by the Principal and Deputy Principal , accompanied by the singing of the National Anthem. Clean Sri Lanka oath was taken by the college officers

**11.01.2024**
## Train Teacher Certificate Award Ceremony

Sri Lankan Examinations Department award training certificate to teachers who have passed the final examination after undergoing training in the 2021/2022 academic year at KopayTeachers' College. This event was held on 11.01 2025 Saturday at 2 pm

The event was presided over by the Principal of the College Shandramouleesan Laleesan and the Governor of the Northern Province, Honorable Nagalingam Vedanayakan, was the Chief Guest.

The lecturers who were responsible for the curriculum presented the lists of names. 174 teachers received certificates at this event.

**14.01.2025**
## Thai Pongal Pooja

were held at the Shiva Temple located Kopay Teachers' College. The events took place under the temple chief priest Shivshree B.Selvasena Gurukkal.

**20.01.2025**
## Freshers' Welcome

Welcome to the new Teacher Students 2024/2025 hold on 20.01.2025 at 2.30 pm at College.

Chairperson Mr S.Laleesan Principal of College.

The college Principal commented that this team will be the least number of Teacher Students inducted in the history of the college.

He further said that in the absence of new appointments, there was a delay in the approval of the college.

**22.01.2025**
## Thai Pongal Festival at College

The Thai Pongal festival organized by Kopay Teacher College Fine Arts Forum was held on 22.01.2025 on Wednesday morning in front of the Saraswathy statue in College

Mrs Jayakumari Sreeskandaraja, former lecturer of the college, was the chief guest on the occasion.

**27.01.2025**
## Renowned Musician Pon Sundaralingam Honored at Kopay Teachers' College

During the event, Pon Sundaralingam shared his experiences as the first music teacher trained at the college and reflected on his journey in the field of music.

In an emotional and heartfelt moment, he composed and performed a song to extend his blessings and gratitude to the college community.

On behalf of the college management, the administration committee honored Pon Sundaralingam, recognizing his contributions to music and his lasting connection to the institution.

The event was a proud and memorable occasion for the entire college community.

# ஆசிரியர் பயிற்சி தகைமைச் சான்றிதழ் வழங்கல் வடக்கு மாகாண ஆளுநர் கௌரவ நாகலிங்கம் வேதநாயகன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்

முதலாம் பக்கத் தொடர்ச்சி ........

அதனைத் தொடர்ந்து கல்வியங்காடு சுதா ரஜீத் குழுவினரின் மங்கல வாத்திய சகிதம் விருந்தினர்கள் மற்றும் பயிற்சி சான்றிதழ் பெறும் ஆசிரியர்கள் விழா மண்டபம் நோக்கி அழைத்துவரப்பட்டனர்.

இதன் போது கலாசாலையின் நூற்றாண்டு பீடத்தில் அமைக்கப்பட்டுள்ள தேசிய கொடியினை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் ஏற்றி வைத்தார். கலாசாலை கொடியினை கலாசாலையின் அதிபர் ஏற்றி வைத்தார். அத்துடன் சரஸ்வதி திருவுருவச் சிலைக்கான வழிபாடும் இடம் பெற்றது.

மண்டப நிகழ்வுகள் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகின.

நிகழ்வில் வரவேற்புரையினை பிரதி அதிபர் க. செந்தில்குமரன் நிகழ்த்தினார். தொடர்ந்து தலைமை உரையினை அதிபர் ஆற்றினார். அதனைத் தொடர்ந்து பிரதமர் விருந்தினருக்கான கௌரவிப்பு இடம்பெற்றது. இதன் போது வடக்கு மாகாண ஆளுநர் பொன்னாடை போர்த்தப் பெற்று மாலை அணிவிக்கப்பெற்று நினைவுச் சின்னம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து ஆளுநருடைய உரை இடம் பெற்றது.

அதனை அடுத்து பயிற்சி சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கற்கை நெறிகளுக்கு பொறுப்பாக இருந்த விரிவுரையாளர்கள் பெயர்ப்பட்டியல்களை முன் வைத்தனர். இதற்கமைய 174 ஆசிரியர்கள் சான்றிதழ்களை பெற்றுக் கொண்டனர்.

பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் சார்பில் தமது உயர் கல்வி தேவை சார்ந்த மகஜரினை உடற்கல்வி ஆசிரியர் சன்சயன் ஆளுநரிடம் கையளித்தார்

இமெல்டா உஷா நன்றியுரை ஆற்றினார்










# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கத்திற்கு வரவேற்பு

கனடாவில் இருந்து வருகை தந்த ஈழத்தின் புகழ்பெற்ற பாடகராகிய இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கம் தான் பயின்ற கோப்பாய் ஆசிரியர் கலாசாலையை தரிசித்து கலாசாலை அன்னைக்கு நூற்றாண்டு வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்வானது 27.01.2025 அன்று கலாசாலையில் இடம்பெற்றது.

இளங்கலைஞர் மன்றத்தின் புத்துருவாக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழாவிற்காக கனடாவில் இருந்து வருகை தந்த அவர் 1972 இல் கலாசாலையில் இசைத்துறை ஆரம்பிக்கப்பட்ட போது பயிற்சி பெற்ற முதல் அணியில் அங்கம் வகித்தார்.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இன்னிசை வேந்தருக்கான வரவேற்பு நிகழ்ச்சியில் கலாசாலையை வாழ்த்தி (விருத்தம்) பாடல் ஒன்றையும் பாடினார்.

**அப்பாடல் வருமாறு**

நூற்றாண்டு கண்ட எங்கள் கலாசாலை

போற்றிப் புகழும் நல்லாசிரிய வளத்துடன்

ஏற்றமுறு சேவை நல்கி என்றும் வாழ்கவென

காற்றிலெழு கீதமெனச் சுந்தரன்யான் இசைத்திட்டேன்.......

கலாசாலை சமூகத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தும் மாலை அணிவித்தும் பொன் சுந்தரலிங்கம் அவர்கள் கௌரவிக்கப்பட்டார்.









# கலாசாலையில் புதிய ஆசிரிய மாணவர்களுக்கு வரவேற்பு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 2024/2025 புதிய கல்வி ஆண்டிற்காக அனுமதி பெற்ற ஆசிரிய மாணவர்களுக்கான வரவேற்பு வைபவம் 20.01.2025 மாலை 2.30 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வை மாணவர் மன்ற காப்பாளர்களான பொ.சற்குணநாதன் சிவலோசனி சுரேந்திரன் ஆகியோர் நெறிப்படுத்தினர்.

இரண்டாம் வருட ஆசிரியர் மாணவன் ந. இராசநாதன் இந்நிகழ்வுகளை முன்னிலைப்படுத்தினார். இந்நிகழ்வின் தொடக்கத்தில் கலாசாலை அதிபர் தேசிய கொடியினையும் பிரதி அதிபர் க.செந்தில்குமரன் கல்லூரிக் கொடியினையும் ஏற்றி வைத்தனர்.

இரண்டாம் வருட ஆசிரியர் மாணவர்கள் முதலாம் வருடத்திற்கு அனுமதி பெற்ற ஆசிரிய மாணவர்களுக்கு பூச்செண்டு கொடுத்து வரவேற்றனர். தொடர்ந்து மண்டபத்தில் மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அதனை அடுத்து வரவேற்புரையினை கமலினி சுதாகர் இரண்டாம் வருட கிறீஸ்தவ நெறி ஆசிரிய மாணவி ஆற்றினார். கலாசாலை அதிபர் தலைமை உரை ஆற்றினார்.க. செந்தில்குமரன் த. கோபாலகிருஷ்ணன் திருமதி சிவலோசனி சுரேந்திரன்

திசை முகப்படுத்தலுக்கு பொறுப்பாக இருந்த விரிவுரையாளர் த.தவசேகர் ஆகியோர் வாழ்த்துரைகளை நல்கினர்.விரிவுரையாளர் வேல் நந்தகுமார் கவி வாழ்த்து வழங்கினார்.

முதலாம் வருட ஆசிரியர் மாணவர்கள் தம்மை அறிமுகம் செய்து கொண்டனர். நிகழ்வுகளில் முதலாம் வருட இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கள் தமது கலை ஆற்றுகைகளை நிகழ்த்தினார்.

கலாசாலை வரலாற்றில் மிகக் குறைவான ஆசிரிய மாணவர்கள் உள்வாங்கப்பட்ட அணியாக இந்த அணி அமைவதாக கலாசாலை அதிபர் கருத்து தெரிவித்தார். புதிதாக நியமனங்கள் இடம்பெறாத சூழலில் கலாசாலைக்கான அனுமதியில் தொய்வு நிலை காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நிகழ்வுகள் 4.30 மணிக்கு நிறைவடைந்தன.







# கலாசாலை கவின்கலை மன்றம் முன்னெடுத்த தைப்பொங்கல் விழா

கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக் கவின்கலை மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தைப்பொங்கல் விழா 22.01.2025 புதன் காலை கலாசாலையில் உள்ள சரஸ்வதி திருவுருவச் சிலை முன்றிலில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் ஜெயக்குமாரி ஸ்ரீஸ்கந்தராஜா கலந்து கொண்டார்.

கலாசாலையின் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை விரிவுரையாளர் ரஜிதா சின்னத்துரையை காப்பாளராக கொண்ட கவின்கலை மன்றத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

தேசியக்கொடியேற்றல் , கலாசாலை கொடி ஏற்றல் என்பவற்றைத் தொடர்ந்து திருக்குறள் வாழ்த்து இடம் பெற்றது.

தொடர்ந்து சூரிய வழிபாட்டுடன் பொங்கல் பானை அடுப்பில் ஏற்றப்பட்டு பொங்கல் வைபவம் இடம்பெற்றது.

இதன் போது கலாசாலையின் அதிபர் ச. லலீசன் ,இந்து மன்றக் காப்பாளர் விரிவுரையாளர் கு.பாலசண்முகன் ஆகியோர் பொங்கல் தொடர்பான விளக்கங்களை மாணவர்களுக்கு வழங்கினர்.

நிகழ்வுகளை விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவர் இலகுநாதன் செந்தூர்ச்செல்வன் முன்னிலைப் படுத்தினார்.

மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் கவிதை, பாடல், கும்மி நடனம் போன்ற கலையாற்றுகைகள் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் ஜெயக்குமாரி ஸ்ரீஸ்கந்தராஜா கவின் கலை மன்றத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

இதேவேளை கலாசாலையின் சிவன் ஆலயத்தில் இந்து மன்ற ஏற்பாட்டில் கடந்த 14.01.2025 செவ்வாய் பொங்கல் தினத்தன்று பொங்கல் வைபவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது ஆகும்












# சேர் பொன் இராமநாதனின் கனவு நனவாகிறது
# இலங்கையின் மூத்த கலாசாலையாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
## சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலாசாலை அதிபர் ச.லலீசன் பெருமிதம்

இலங்கையில் உள்ள ஆசிரியர் கல்வி நிறுவனங்களுள் மிக மூத்த நிறுவனம் என்ற பெருமையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கொண்டுள்ளது. 1923 இல் இக்கலாசாலை அமைவதற்கு அடித்தளம் இட்ட சேர் பொன் இராமநாதனின் கனவு இந்த ஆண்டிலும் நனவாவதையிட்டு மகிழ்வடைகின்றேன். 174 ஆசிரியர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாகத் தகைமை பெற்றுள்ளமை மகிழ்ச்சியைத் தருகின்றது. இவ்வாறு தெரிவித்தார் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன்.

கலாசாலையில் 11.01.2025 சனிக்கிழமை இடம்பெற்ற பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழ் வழங்கும் நிகழ்விற்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு

கலாசாலைக்கு தற்போது பல்வேறு தகைமயுள்ளோர் உள்வாங்கப்படுகின்றனர். பட்டதாரிகள் அல்லாடீதாருக்கே இங்கு ஆசிரியர் பயிற்சி வழங்கப்படுகின்றது. பல்கலைக்கழகத்தில் அல்லது உயர்தொழில் நுட்பக் கல்லூரியில் டிப்ளோமா பட்டம் பெற்று ஆசிரியர்களாக நியமனம் பெற்றோர், தனியார் பாடசாலை ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்களாக இருந்து நிரந்தர நியமனம் பெற்றோர், உயர்தரப் பரீட்சையின் அடிப்படையில் இடம்பெறும் போட்டிப்பரீட்சையில் இருந்து தெரிவாகி ஆசிரியராவோர், பிரிவேனா ஆசிரியர்கள் என பல வகுதிகளில் இவர்கள் அடங்குகின்றனர். தொண்டர் ஆசிரியர்களாக இருந்து நிரந்தர நியமனம் பெற்றோர் 2000 ஆம் ஆண்டுடன் தமது பயிற்சியை நிறைவு செய்துவிட்டனர்.




தற்போது அதாவது 2024, 2025 இல் தனியார் பாடசாலை ஆசிரியர்களும் டிப்ளோமா பட்டம் பெற்ற ஆசிரியர்களுமே கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயில்கின்றனர். இந்த எண்ணிக்கை சற்றுக் குறைவாக உள்ளது. அரச ஆசிரியர் நியமனங்கள் நீண்டகாலமாக வழங்கப்படாத நிலையில் இந்தக் குறைவு நிலை காணப்படுகின்றது. ஆசிரியர் கலாசாலைகள் ஆசிரிய கல்வியை வழங்கும் தமது வகிபங்கில் புதிய பரிணாமத்தை எய்த வேண்டும். என்று தெரிவித்த அவர்

சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கலாசாலைக்குப் பெருமை சேர்த்த ஆசிரிய மாணவர்களையும் பாராட்டினார். அந்த வகையில் ஆங்கில நெறி எமில்டா உஷா 12ஏ, உடற்கல்வி சிவரூபன் சிறீசோபனா 12ஏ, வணிக நெறி சரவணபவானந்தன் கல்பனா 11 ஏ உடற்கல்வி ஜெயராமன் சாருகேசி 11 ஏ, உடற்கல்வி எலியாஸ் குலியா இமெல்டா 10 ஏ, உடற்கல்வி சந்திரசோதி சிறீசக்தி 10 ஏ, உடற்கல்வி சுப்பிரமணியம் தனசீலன் 10 ஏ, உடற்கல்வி அருணசிறிநாதன் ஜெனார்த்தனன் 10 ஏ, தமிழ் றொபேட் தேவசகாயம் சுரேஸ் 10 ஏ என 10 ஏ பெறுபேறுகளுக்கு மேல் பெற்றவர்கள் உள்ளனர் என்றார்.

# ஆசிரியர் கலாசாலையின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கௌரவ ஆளுநரின் உரையிலிருந்து

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை மாலை (11.01.2025) இடம்பெற்றது. கல்லூரியின் முதல்வர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர் தனது உரையில்,

தலைமைத்துவம் முக்கியமானது. பாடசாலை ஒன்றின் எழுச்சியும் வீழ்ச்சியும் அதிபர் ஒருவரிலேயே தங்கியிருக்கின்றது. இதைப் பல பாடசாலைகளில் நாங்கள் காண்கின்றோம். இன்று எம்மவர்களிடையே தலைமைத்துவப் பண்பு குன்றிச் செல்கின்றது. அதை எதிர்காலத்தில் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

நாங்கள் இன்றும் எங்களுக்கு கற்பித்த ஆசிரியர்களை மதிக்கின்றோம். அவர்களையே எங்களின் முன்மாதிரிகளாகக் கொள்கின்றோம். நீங்களும் அவ்வாறு மற்றவர்கள் மதிக்கின்ற ஆசிரியர்களாக மாறவேண்டும். கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்று சொல்வார்கள். அதைப்போல உங்கள் ஆசிரியச் சேவையைச் செய்யுங்கள். அதனால் உங்கள் சேவைக்கு உரிய பலன் கிடைக்கும்.

எந்தத்துறையிலும் பயிற்சி இருந்தால்தான் சிறப்பான சேவையைச் செய்யமுடியும். அதனால்தான் காலத்துக்கு காலம் பயிற்சிகள் வழங்கப் படுகின்றன. நீங்கள் இங்கு பெற்ற பயிற்சிகளின் அடிப்படையில் சிறப்பான சேவையை வழங்குங்கள். நீங்கள் ஆசிரிய சேவைக்காக, முன்னர் பணியாற்றிய இடங்களுக்குச் செல்லப் போகின்றீர்கள். அங்குள்ள மாணவர்களை கல்வியில் முன்னேற்ற அர்ப்பணியுங்கள் என்று தனது உரையில் ஆளுநர் குறிப்பிட்டார்.



கல்வியால்தான் எந்தப் பிரதேசமும் அபிவிருத்தியடையும். எனவே நீங்கள் செய்யும் சேவை ஒரு பிரதேசத்தையே முன்னேற்றும். அதை நினைவிலிருத்தி சேவையாற்றுங்கள், என்றார் ஆளுநர்.

இந்த நிகழ்வில் 174 ஆசிரிய மாணவர்கள் சான்றிதழைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## துயர் பகிர்கிறோம்

**எமது கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சிவலோசனி சுரேந்திரன் அவர்களது பாசமிகு தாயார் திருமதி பசுபதியம்மா சிவசுப் பிரமணியம் அவர்களின் பிரிவு செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம்.**

**அன்னாரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.**

**கலாசாலை சமூகம்**



# புலமைப் பரிசில் பரீட்சை பற்றிய ஒரு பார்வை

## நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி புஸ்பலதா மனோகரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் புதன் ஒன்றுகூடல் நிகழ்வு 29.01.2025 காலை 8.30 மணிக்கு அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வை விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவர்கள் நெறிப்படுத்தினர். ஆசிரிய மாணவி தவராசா கீர்த்தனா முன்னிலைப்படுத்தினார்.

ஆசிரிய மாணவி வீரராகவன் மாயாதேவி தை அமாவாசையின் சிறப்பு என்ற பொருளில் உரையாற்றினார். தொடர்ந்து நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற ஆசிரியர் புஸ்பலதா மனோகரன் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை ஒரு பார்வை என்ற பொருளில் உரையாற்றினார்.

இவருக்கான அறிமுகவுரையை ஆசிரிய மாணவர் இ. செந்தூர்ச்செல்வன் மேற்கொண்டார். கலாசாலைச் சமூகத்தின் சார்பில் சிரேஷ்ட விரிவுரையாளர் சிவலோசனி சுரேந்திரன் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து மதிப்பளித்தார். கலசாலை அதிபர் ச. லலீசன் நிறைவுரையாற்றினார்.











# யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் தைப்பொங்கல் விழா

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் 14.01.2025 பொங்கல் நாளன்று தைப்பொங்கல் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா.செல்வசேனக் குருக்கள் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.







# கூடி வாழ்வோம் நாடகநூல் மூலம் வடக்கு மாகாண நிலையில் பரிசுபெற்ற சந்திரிகா தர்மரட்ணத்திற்குப் கலாசாலையில் பாராட்டு

2023 ஏப்ரல் மாதம் கூடி வாழ்வோம் என்ற நாடக நூலை எழுதி கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் வைத்து வெளியீடு செய்த கலாசாலை நாடகத்துறை விரிவுரையாளர் திருமதி சந்திரிகா தர்மரத்தினம் அவர்கள்

கடந்த ஆண்டு மன்னாரில் இடம் பெற்ற பண்பாட்டு பெருவிழாவின் போது சிறந்த நாடக நூலுக்கான பரிசை பெற்றிருந்தார்.

இதனையொட்டி அவரை கலாசாலை விரிவுரையாளர் கழகத்தினர் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் பாராட்டி கௌரவித்தனர்.

கலாசாலை அதிபர் ச.லலிசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் அதிபர் வீ.கருணைலிங்கம் முன்னாள் விரிவுரையாளர்களான வ.சி.குணசீலன், திருமதி மு.ஜெயக்குமாரி திருமதி க.அன்பரசி ஆகியோரும் கலாசாலை விரிவுரையாளர்களும் கலந்து கொண்டு வாழ்த்தினர்.



